## ஆம்பூர் நகரம்

**அமைப்பாளர் :** மு.சரண்ராஜ், 32/18–ஏ, வளையல்க்காரர் தெரு, ஆம்பூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.சத்யராஜ், 12, இந்திரா நகர், 3–வது தெரு, எஸ்.கே.ரோடு, ஆம்பூர். (2) அ.கோபி, 30, ஏரிக்கரை தெரு, கெங்காபுரம், ஆம்பூர். (3) ர.அரவிந்தன், 6, 2–வது தெரு, 3–வது தார்வழி, ஆம்பூர். (4) யூ.முபாரக் பாஷா, 35/19, 4–வது தெரு, கே.எம். நகர், புதுமனை, ஆம்பூர். (5) ச.கௌதம், 20/2, புதுத் தெரு, சான்றோர்குப்பம், ஆம்பூர். (6) செ.வெங்கடேசன், 7/4, குமரேசன் தெரு, கஸ்பா–பி, ஆம்பூர். (7) சி.நபீஸ் அஹமத், 6, சுண்ணாம்புக்காரர் தெரு, 4–வது சந்து, ஆம்பூர்.

## ஆலங்காயம் பேரூர்

**அமைப்பாளர் :** த.சீனிவாசன், 32, பாமாண்டி சின்னபையன் தெரு, ஆலங்காயம், திருப்பத்தூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.கணேஷ், 18, ராஜாபாளையம், ஆலங்காயம், திருப்பத்தூர். (2) சீ.தண்டபாணி, 18, மதனப்பள்ளியான் தெரு, படக்குப்பம், ஆலங்காயம் (அ), திருப்பத்தூர். (3) சே.சாந்தகுமார், 14, காமராஜர் தெரு, ஆலங்காயம், பெத்தூர், திருப்பத்தூர். (4) த.சந்துரு, 25, ரெட்டியார் தெரு, பெத்தூர், ஆலங்காயம்.

## உதயேந்திரம் பேரூர்

**அமைப்பாளர் :** கே.சத்தியமூர்த்தி, 17/31, காந்தி ரோடு, உதயேந்திரம், வாணியம்பாடி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.சிலம்பரசன், 17, புதுத் தெரு காலனி, ஜாப்ராபாத் (அ), மேட்டுப்பாளையம், வாணியம்பாடி. (2) ர.மதன்குமார், 9, பாரதிதாசன் தெரு, உதயேந்திரம், வாணியம்பாடி. (3) ரா.அருண், 5, சுப்புராயன் கோயில் தெரு, உதயேந்திரம், வாணியம்பாடி. (4) சா.வினோத்குமார், 11/10, தொப்பசாமி தெரு, சி.வி.பட்டறை, உதயேந்திரம், வாணியம்பாடி, திருப்பத்தூர்.

## நாட்றம்பள்ளி பேரூர்

**அமைப்பாளர் :** (1) சூ.ஸ்ரீகீர்த்திராஜன், 5, ரங்கசாமி தெரு, நாட்றம்பள்ளி (அ), திருப்பத்தூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.அகிலன், 155/2 ஆர்.சி.எஸ். பிரதான சாலை, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர். (2) ஜெ.வெங்கடேசன், 58, தாயப்பர் தெரு, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர். (3) மு.ஆனந்தன், தாயப்பர் தெரு, நாட்றம்பள்ளி.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 30–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மெட்ராஸ் ENT ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்களின் 70 – வது பிறந்தநாளையொட்டி நேற்று (30.1.2025) சென்னை, அடையாறில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (30.1.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்டத்தின் (Elite Sportsperson Scheme) வீரர் ப்ரித்வி சேகர் அவர்கள் சந்தித்து, ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் 24.1.2025 முதல் 26.1.2025 வரை நடைபெற்ற செவித்திறன் குறைபாடுடையோருக்கான ஆஸ்திரேலியா டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றதற்கான பரிசுக் கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பெற்றோர் உடனிருந்தனர்.

# ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்திற்கு மேலும் ரூ.500 கோடி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,ஜன.31-

**கலைஞரின் கனவு இல்லம் திட்டத்திற்கு மேலும் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

“கலைஞரின் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000/- வீதம் மொத்தம் ரூ.3500 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கிராமப்புற பகுதிகளில் ஏறத்தாழ 8 இலட்சம் குடிசை வீடுகள் உள்ளதாக “அனைவருக்கும் வீடு” என்ற கணக்கெடுப்பின் வழியாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் “குடிசையில்லா தமிழ்நாடு” என்ற இலக்கினை அடையும் பொருட்டு, எதிர்வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 6 வருடங்களில் 8 இலட்சம் வீடுகள் புதியதாக கட்டித்தர அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி நடப்பு நிதியாண்டில் (2024-25) ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டின் பரப்பளவு, சமையலறை உட்பட, 360 சதுர அடியாகும். பயனாளிகளின் நிதிச்சுமையை குறைக்கும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் TANCEM சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, துறை மூலம் வழங்கப்படுகிறது.

வீட்டின் கட்டுமானத்திற்கு ஏற்ப தரைமட்ட நிலை, ஜன்னல் மட்ட நிலை, கூரை வேயப்பட்ட நிலை மற்றும் பணிமுடிவுற்ற பின் என நான்கு தவணைகளில் ஒற்றை ஒருங்கிணைப்பு வங்கி கணக்கின் (Single Nodal Account-SNA) மூலம் தொகை நேரடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசால் ரூ.1625.30 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீட்டின் கட்டுமான நிலைக்கு ஏற்ப ரூ.1350.99 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், துறை மூலம் வழங்கப்படும் சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளுக்கு (Steel) என ரூ.249.86 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.1600.85 கோடி இதுவரை கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வீடுகளும் விரைவாக கட்டப்பட்டு வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, வீடுகளின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு மேலும் ரூ.500 கோடி விடுவித்து ஆணை வழங்கியுள்ளது. தற்போது வரப்பெற்றுள்ள ரூ.500 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.2125.30 கோடி பெறப்பட்டு கட்டுமான நிலைக்கு ஏற்ப பயனாளிகளின் வங்கிகணக்கிற்கு நேரடியாக தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிதியாண்டிற்குள் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் ஆரிமுத்து மோட்டூர் ஊராட்சி திருப்பாக்குட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில் குமார் , மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர் தணிகாசலம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கிருபாகரன் , ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் எஸ் .பிரியா சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் –

# ஆசிய ட்ரையத்லான் கோப்பை போட்டிகள்!

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – பிப்ரவரி மாதம் நடத்துகிறது!

சென்னை, ஜன. 31-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படியும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் மற்றும் ஆசிய ட்ரையத்லான் கோப்பை போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

நேரு உள்விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கூறியதாவது:-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பிப்ரவரி மாதம் தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்துடன் இணைந்து 23வது தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் மற்றும் தமிழ்நாடு ட்ரையத்லான் சங்கத்துடன் இணைந்து SDAT ஆசிய ட்ரையாத்லான் கோப்பை போட்டிகளை நடத்தவுள்ளது.

23வது தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் 2025 போட்டி பிப்ரவரி 17 முதல் 20 வரை சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் இந்தியா முழுவதிலும் இருந்து 1,700க்கும் மேற்பட்ட பாரா தடகள வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். இந்த சாம்பியன்ஷிப் போட்டி மாற்றுத்திறனாளிகள் தங்கள் அசாதாரண திறன்கள் வெளிப்படுத்தும் ஒரு தளமாக அமையும்.

SDAT ஆசிய ட்ரையாத்லான் (Triathlon) கோப்பை 2025 போட்டி பிப்ரவரி 16-ஆம் தேதி சென்னை INS (இந்திய கடற்படை கப்பல்) அடையாறில் நடைபெறும். சர்வதேச வீரர்கள் பங்குபெறும் இப்போட்டி 750 மீட்டர் நீச்சல், 20 கிலோமீட்டர் சைக்ளிங் மற்றும் 5 கிலோமீட்டர் ஓட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நடத்தப்படும்.

இதன் தொடர்ச்சியாக, தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் மற்றும் ஆசிய ட்ரையத்லான் கோப்பை போட்டிகளுக்கான சின்னம் மற்றும் இலச்சினையை வெளியிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இந்திய பாராலிம்பிக் குழுவின் பொதுச் செயலாளர் ஜெயவந்த் குண்டு, தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்தின் செயலாளர் கிருபாகரராஜா, தமிழ்நாடு ட்ரையாத்லான் சங்கத்தின் தலைவர் ராமசந்திரன், பாரிஸ் பாராலிம்பிக்ஸில் வெள்ளி பதக்கம் வென்ற செல்வி. துளசிமதி முருகேசன், விளையாட்டு சங்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வென்ற விளையாட்டு வீரர்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஜன. 31-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.1.2025) தேசிய அளவிலான குதிரையேற்ற போட்டிகளில் பதக்கங்களை வென்ற வீரர், வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில், நவம்பர் 2024 பெங்களூரில் நடைபெற்ற உலக குதிரையேற்ற (Equestrian) கூட்டமைப்பின் உலக ட்ரெஸ்ஸேஜ் சாலஞ்ச் போட்டியின் (Federation Equestre Internationale's World Dressage Challenge) யூத் பிரிவில் தங்க பதக்கம் வென்றதன் மூலம் ஆசியாவின் சிறந்த யூத் ரைடர் (Best Youth Rider) என்ற பட்டத்தையும் உலக குதிரையேற்ற தரவரிசையில் ஐந்தாம் இடமும் பிடித்த தமிழ்நாடு வீராங்கனை செல்வி. மிராயா தாதாபோய் அவர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார்.

தொடர்ந்து, மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் 17.1.2025 முதல் 21.1.2025 வரை நடைபெற்ற 69 வது ஜூனியர் தேசிய பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாடு பெண்கள் அணி வீராங்கனைகள் துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

மேலும், மலேசியாவில் 10 வது ஆசிய பசிபிக் காதுகேளாதோர் போட்டிகளில் கலந்து கொள்ள தமிழ்நாடு காதுகேளாதோர் சங்கத்தின் சார்பில் நிதியுதவி கேட்டுக்கொண்டதற்கிணங்க, 16.11.2024 அன்று தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை மூலம் தலா ரூ.20,000/ வீதம் 11 வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ரூ.2,20,000/ நிதியுதவி காசோலைகளை வழங்கி வாழ்த்து தெரிவித்து வழி அனுப்பிவைத்தார். இப்போட்டியில் 4 தங்கம், 6 வெள்ளி மற்றும் 4 வெண்கல பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

தொடர்ந்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 28 மாவட்டங்களில் செயல்படும் 39 விளையாட்டு விடுதிகளில் பயில்கின்ற 2,400 மாணவ மாணவிகளுக்கு உயர்ரக ட்ராக் சூட் மற்றும் இரண்டு டிஷர்ட்டுகளை வழங்குவதன் அடையாளமாக சென்னை நேரு விளையாட்டரங்க விளையாட்டு விடுதியைச் சேர்ந்த 8 மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் விளையாட்டு சங்கங்களின் நிர்வாகிகள், பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.




தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கழுநீர்குளம் ஊராட்சியில் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைய உள்ள கலைஞர் அவர்களின் அறிவாலய கட்டிடத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அடிக்கல் நாட்டியும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா கொடிக்கம்பத்தில் கழக கொடி ஏற்றியும் பணிகளை துவக்கி வைத்தார். உடன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, ஒன்றிய செயலாளர் சிவன்பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இராணிப்பேட்டை முத்துக்கடையில் தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத், காந்தி மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நகர செயலாளர் பி.பூங்காவனம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத், மாவட்ட பிரதிநிதி எஸ்.கிருஷ்ணன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் இசட். அப்துல்லா, மாவட்ட பிரதிநிதி கோபிகிருஷ்ணன், நகர துணை செயலாளர் ஆனந்தராஜ், நகர பொருளாளர் ஏ.அமித், அம்பிகா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பி.எல்.டி.சிவா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல்பரசுராமன், நகர மாணவரணி பாலாஜி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பி.யுவராஜா, மகி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.